**செய்தி வெளியீடு எண்:254** **நாள் : 01.06.2016**

## <u>செய்தி வெளியீடு</u>

**தமிழ் நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையில் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் பி. தங்கமணி அவர்கள் <u>தலைமையில் ஆய்வு கூட்டம் இன்று (01/06/2016) நடைபெற்றது.</u>**

---

தமிழ் நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையில் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் பி. தங்கமணி அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் இன்று (01/06/2016) நடைபெற்றது. தமிழ் நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. மங்கட் ராம் சர்மா, இ.ஆ.ப. அவர்கள்முன்னிலை வகித்து எரிசக்தி மேம்பாட்டு முகமையில் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து விளக்கினார்கள். பின்னர் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் பி. தங்கமணி அவர்கள் ஆய்வு செய்து பேசுகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்கி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தமிழ்நாடு எரிசக்தி கொள்கை 2012 வெளியிட்டார்கள். இதன்மூலம் 3000 மெகாவாட் சூரிய எரிசக்தி மூலம் மின் உற்பத்தி செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐந்தாண்டுகளில் ஒரு லட்சத்து

என்பத்தைந்தாயிரம் (1,85,000) பசுமை வீடுகளில் சூரிய மின் விளக்கு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளது. பத்தாயிரம் வீடுகளில் சூரிய மேற்கூரை அமைப்புகள் நிறுவுவதல் இன்னும் குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சிறப்பு திட்டமாக உள்ளது. ஒரு கிலோவாட் சூரிய மேற்கூரை அமைக்கும் வீடுகளுக்கு ஊக்கத்தொகையாக தமிழக அரசு ரூ.20,000/ மான்யம் வழங்குகிறது. இத்திட்டத்தில் இதுவரை 6371 எண்ணிக்கை ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இது போல அரசு கட்டிடங்களில் சூரிய மேற்கூரை அமைப்புகள் நிறுவுவதல் போன்று பல எண்ணற்ற சிறப்பு திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது.

பொது மேலாளர் (தொழில் நுட்பம்) திரு பாலகிருஷ்ணன், துணைப்பொது மேலாளர்கள் திரு. கார்த்திகேயன், திரு. ஜெயராமன், திரு. டியுக் கிறிஸ்டோபர், மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பொது மேலாளர் (திட்டம்) திருமதி இந்துமதி நன்றி கூறினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**